**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | DVC.05/2024 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | ம.சா.1 |
| Name : | திருமதி.ராதா |
| Husband Name : | திரு.முருககணேஷ் |
| Village : | பெரம்பலூர் |
| Taluk : | பெரம்பலூர் |
| Age : | 30 / 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 15.09.2025

**(1969-ம் ஆண்டின் 54வது விதியில் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**மனுதாரர் ஆஜர். எதிர்மனுதாரர் ஆஜர் ).**

**குறுக்குவிசாரணை**

1. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தான் என் வழக்கறிஞர் தயார் செய்தார் என்றால் சரிதான். நான் ஒரு பல் மருத்துவர் என்றால் சரிதான். நான் தற்போது செல்லம் மருத்துவமனையில்( Part time) வேலை பார்க்கின்றேன். 2ம் எதிர்மனுதாரரான எனது மாமனார் பெரம்பலூர் நகராட்சியில் முன்னால் நகராட்சி தலைவராக இருந்தார் என்றால் சரிதான். அவர் அரசு துறையில் பொறியாளராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுள்ளார் என்றால் பணியாளராக இருந்த விவரம் எனக்கு தெரியும். ஓய்வு பெற்ற விவரம் எனக்கு தெரியாது. 3ம் எதிர்மனுதாரர் அரசு பள்ளியில் ஆசிரியாரக பணியாற்றுகிறார் என்றால் சரிதான். 4ம் எதிர்மனுதாரர் பெரம்பலூர் புதிய பேருந்து நிலையம் அருகில் எத்தனை ஆண்டுகளாமாக குடியிருந்து வருகிறார் என்றால் 2024-ம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து குடியிருந்து வருகிறார். எனக்கு திருமணம் ஆகி எத்தனை மாதங்கள் எதிர்மனுதாரர் வீட்டில் இருந்தேன் என்றால் ஒரு மாதம் கூட்டு குடும்பமாக இருந்தோம். அதன் பிறகு மேல்மாடியில் தனிகுடித்தனம் சென்றுவிட்டு 7 மாதங்கள் அங்கு வசித்து வந்த நிலையில் எதிர்மனுதாரர்கள் பிரச்சனை செய்து

வந்ததால் 1ம் எதிர்மனுதாரர் அவர் விருப்பபடி எனது பெற்றோர் வீட்டின் அருகில் வாடகைக்கு குடிசென்றுவிட்டோம். நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவிலோ, எனது பிரமாண வாக்குமூலத்திலோ, எதிர்மனுதாரர்கள் யார், யார் எந்த தேதியில் எப்பொழுது என்ன கொடுமை செய்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஒரு சில விஷயங்கள் சொல்லியுள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்திலும், மனுவிலும் அவ்வாறு குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனக்கு வளைகாப்பு நடக்கும் போது எனது மாமியார் எனக்கு என்ன நகை போட்டார் என்றால் ஒரு செயின் போட்டார். அது எத்தனை பவுன் என்றால் அவர்களே அதை பெற்றுக்கொண்டதால் அதன் விவரம் எனக்கு தெரியாது. எனது பிரமாண வாக்குமூல 4வது பக்கத்தில் எனது பெற்றோர் எனக்கு சீதனமாக அளித்த நகைகளையும், 1ம் எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் எனக்கு அணிவித்த நகைகளையும் 1ம் எதிர்மனுதாரர் என்னிடம் கேட்டார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். திருமணம் ஆனவுடன் 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் எனக்கு எத்தனை பவுன் நகை போட்டார்கள் என்று கேட்டதாக பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் தவறானது மற்றும் வழக்கிற்காக ஜோடிக்கப்பட்ட பொய் என்றால் சரியல்ல. 2வது எதிர்மனுதாரர் ஆதிதிராவிடர் வகுப்பை சாராதவர் என்றும் மாறாக பண்டரா வகுப்பை சார்ந்தவர் என்று பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டப்பட்டது பொய் என்றாலும் 2வது எதிர்மனுதாரரும் ஆதிதிராவிடர் வகுப்பை சாராதவர் என்றாலும் பண்டாரவகுப்பும் SC பிரிவை சார்ந்ததுதான். ஆனால் அவர்கள் பேசும் பொழுது எனது ஜாதி பெண்ணை பார்த்து திருமணம் செய்திருப்பேன் என்று கூறுவார். எனது பிரமாண வாக்குமூலத்தில் தனிகுடித்தனம் சென்றதைதான் எதிர்மனுதாரர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்துக் கொண்டு என்னை கொடுமை செய்த விவரம் எனக்கு தெரியவருகிறது என்று கூறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். எதிர்மனுதாரர்கள் எனக்கு கொடுமை செய்த விவரம் குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. 1ம் எதிர்மனுதாரருடன் மாடிவீட்டில் குடியிருக்கும் போது அவர் வீட்டிற்கு தேவையான சமையல் பொருட்கள் ஏதும் வாங்கி தரவில்லை என்று கூறுவது பொய் என்றாலும் நான் அவருடன் இருந்த வரையில் 1ம் எதிர்மனுதாரர் என்னை நல்ல முறையில் பார்த்துக்கொண்டார் என்றாலும் சரியல்ல. நான் பல் மருத்துவர் என்பதால் 3ம் எதிர்மனுதாரர் MR பல் மருத்துவமனை என்ற மருத்துவமனையை திறக்க 1ம்

எதிர்மனுதாரரின் பெயரில் கட்டிடவாடகை ஒப்பந்த தொகை கொடுத்து பல் மருத்துவமனைக்கு தேவையான உபகரணங்கள் வாங்கி கொடுத்து மேற்படி மருத்துவமனையை திறந்து வைத்தார் என்றால் கட்டிடவாடகை ஒப்பந்த தொகையை மட்டும் தான் கொடுத்தார். தேவையான உபகரண பொருட்கள் எதுவும் வாங்கி தரவில்லை. மருத்துவமனைக்கு தேவையான உபகரண பொருட்களை எனது பெற்றோர் எனக்கு சீதனமாக போட்ட நகைகளை வைத்து தான் வாங்கியதாக எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த நகைகளை எவ்வளவு தொகைக்கு, எங்கு அடகு வைத்தேன், எப்பொழுது வட்டி கட்டி அந்நகையை மீட்டினேன் என்றால் 3,00,000/–(மூன்று லட்சம்) ரூபாய்க்கு SBI வங்கியில் மருத்துவமனைய திறந்த ஆரம்பத்திலே வைத்து 1 1/2 ஆண்டுகள் கழித்து மீட்டுவிட்டேன்.

**(எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.